# இந்த இதழ்க் கட்டுரைகள் பற்றி...

*இந்த இதழில் ஆறு ஆய்வுக் கட்டுரைகளும், பேரா. கா. சிவத்தம்பி பற்றிய இரண்டு நினைவுக் குறிப்புகளும், வேலூர் மாவட்டத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருள்கள் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளன.*

*முனைவர் பாரதிபுத்திரன் அவர்களிடம் பேரா. கா. சிவத்தம்பி பற்றிய கட்டுரை ஒன்றை எழுதித்தருமாறு கேட்ட பொழுது, அவர், 'நான் எழுதுவது இருக்கட்டும், என்னுடைய ஆய்வேட்டைப் புத்தகமாக வெளியிடும் எண்ணத்தில் பேரா. சிவத்தம்பி அவர்களிடம் அணிந்துரை கேட்டேன், அவரும் அளித்துள்ளார்; அது இன்னும் வெளிவரவில்லை, அந்தக் கட்டுரையைப் புதிய பனுவலில் வெளியிடுவது மிகவும் பொருத்தமாக இருக்கும்' என்று தெரிவித்தார். தன்னிடமிருந்த கட்டுரையையும் அனுப்பிவைத்தார்.*

*பேராசிரியரின் இறுதிக் காலத்தில் அவரே கையால் எழுத இயலாத நிலையில், அவர் சொல்லப் பிறர் எழுதியவையாகத்தான் பலவும் வெளிவந்துள்ளன. அவரது சிந்தனையோட்டத்திற்கும், பேச்சுக்கும், அதை எழுதுபவரின் புரிதலுக்கும் உள்ள இடைவெளிகளை இந்த எழுத்துகளில் காணலாம். இந்தக் காலத்தில்தான் அவரது எழுத்துகள் அதிகமாகவும் வெளிவந்தன. அவரது சிந்தனை முதிர்ச்சியும் பல ஆண்டுக்கால எழுத்து வெளிப்பாடும் சேர்ந்து மிகவும் செழுமையான நிலையை அடைந்திருந்தன. இருப்பினும், கருத்தாழம் உள்ள அளவிற்கு இந்த எழுத்துகளில் தொடர்ச்சியும் கோர்வையும் இல்லாமல் போய்விட்டன. அவரது நேர்காணல்களாக வெளிவந்தவற்றிலும் இந்தத் தன்மையைக் காணலாம். நேர்ப்பேச்சில் அவரது உடல்மொழியும், மற்றவர்களுக்குப் புரிந்துவிடும் என்ற அவரது முடிவும் சேர்ந்து கருத்துகள் முழுவதும் மொழிவழியாக வெளிப்படாமல் மௌன மொழியாகவும் மாறும்; ஆனால் அவை சூழல் சார்ந்து விளக்கம் பெற்றுவிடும். பேச்சின்போது இது ஓரளவு சரியாகவே சென்றடையும். ஆனால் எழுத்து என்று வரும்போது இந்த இடைவெளிகளை இட்டுநிரப்பினால்தான் அவரது கருத்துகள் முழுமையாகச் சென்றடையும். அவரது நூல்களில் பரவலான வாசிப்பு உள்ளவர்களும் அவருடைய வெளிப்பாட்டு முறையை நன்கு அறிந்தவர்களும் இந்த எழுத்துகளைச் செப்பம்செய்து வெளியிட்டிருந்தால் அவரது பிற்கால எழுத்துகள் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கும்.*

*இன்றைய ஆய்வாளர்கள் பலரிடமும் பேராசிரியரது தாக்கம் மிகுதியாக உள்ளது. அவரது சொல்லாடல்கள் பலரிடமும் பயில்கின்றன. அவரது ஆய்வு முறையைப் பின்பற்ற முடியாவிட்டாலும் பலரும் அதை மதித்து ஏற்றுக்கொள்கின்றனர்.*

*பேராசிரியருடைய கட்டுரைகள் யாவும் தொகுத்து வெளியிடப்படல் வேண்டும். அவரது பணிகள் பற்றிய மதிப்பீடுகள் பல்வேறு கருத்தரங்குகள் வழியாக விவாதிக்கப்பட வேண்டும். அவருடைய காலத்திற்கு முன் தமிழ் ஆராய்ச்சி இருந்த விதமும், அவரது காலத்திற்குப் பின்னர் தமிழியல் ஆராய்ச்சி அடைந்துள்ள மாற்றங்கள் பற்றியும் விரிவான விவாதங்கள் தேவைப்படுகின்றன.*

*ஆய்வுப் பொருளின் மையத்தைச் சரியாகப் பிடித்தல், ஆழமாகச் சிந்தித்தல், அகன்ற பார்வை, பல துறைகளையும் இணைத்து நோக்குதல் ஆகியவை பேராசிரியரின் முக்கியமான ஆய்வு ஆளுமைகள் எனலாம். இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக அமைவது அவருடைய அரசியல் பார்வையே என்பதையும் மறந்துவிடக்கூடாது.*

*அவர் விட்டுச்சென்ற பணியைத் தொடர்வதும் அவரது ஆய்வு முறையியலைப் பின்பற்றி ஆழமான ஆய்வுகள் செய்து தமிழ் வாழ்க்கையையும் தமிழ்ப் பண்பாட்டையும் விளக்குவதுதான் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாக இருக்க முடியும்.*

*பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் கட்டுரையைக் கொடுத்து உதவிய முனைவர் பாரதிபுத்திரன் அவர்களுக்கும், முனைவர் கணேசலிங்கன் அவர்களிடம் பேராசிரியர் பற்றிய நினைவுக் கட்டுரையைப் பெற்றுக்கொடுத்து உதவிய முனைவர் பக்தவத்சல பாரதி அவர்களுக்கும் நன்றி. இந்த இதழைக் கொண்டுவருவதில் உதவிய நண்பர் ப. தாமரைக்கண்ணன் அவர்களுக்கும், மாணவர்கள் சே. சீனிவாசன், த. குணாநிதி ஆகியோருக்கும் நன்றி.*

*வணக்கத்துடன்*

**இரா. சீனிவாசன்**